


# யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்திற்கான புலம்பெயர் இலங்கைச் சமூகம்


cepa
centre for poverty analysis

# உள்ளடக்கம்




## நிறைவேற்றுச் சுருக்கம்

யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நீடித்த சமாதானம் போன்றவற்றுக்கான சிறந்ததொரு பயனுள்ள பங்காளராக இருக்கின்ற புலம்பெயர் இலங்கையருடன் இணைந்து ஈடுபடுவதற்கான ஒரு வெற்றிகரமான மூலோபாயமானது தேசிய, பிராந்திய மற்றும் மாவட்ட மட்டங்களை ஒன்றிணைக்கக்கூடிய கவனமாக வடிவமைக்கப்பட்டதும், முரண்பாட்டு உணர்திறன் கொண்டதும், ஒத்திசைவானதுமான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.



## மாறும் பெயர்கள்

அரசாங்கத்தின் புதிய மீள்பெயரிடுதலானது, இலங்கையின் பாரம்பரிய மக்கள் வெளிநாடுகளில் குடியேறுவதற்கு வழிவகுத்த பல்வேறுபட்ட காரணங்களையும், போக்குகளையும் பிரதிபலிப்பதாகவோ, மதிக்கவோ இல்லை. இப்புதிய மீள்பெயரிடல் முறையானது, யுத்தத்திற்கு பின்னரான காலகட்டத்தில் நல்லிணக்கம், நீதி மற்றும் அபிவிருத்தி போன்றவற்றுக்கான எதிர்விளைவாக கண்டறியப்பட்டுள்ளது.




## மாறும் கண்ணோட்டங்கள்

யுத்தத்திற்கு பின்னரான அபிருவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தில் ஈடுபடக்கூடிய புலம்பெயர்ந்தவர்கள் குறித்த அரசாங்கத்தின் தெளிவற்றதும், தற்காலிகமானதுமான கவனமானது, அரசாங்கம் மற்றும் தமிழர்களுக்கு எதிரான தகவல்களை கையாளுவதற்கும், மக்களுக்கு தவறான தகவல்களை வழங்குவதற்கும் வழிவகுக்கின்றது.




## மாறும் வாய்ப்புகள்

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தேசிய மற்றும் பிராந்திய அதிகாரிகள் சுற்றுலாத்துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட விரிவான அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் செயற்திட்டமொன்றினை உருவாக்குதல் வேண்டும்.



## மாறும் இடங்கள்

தரமான சான்றிதழ்களுக்கான ஒப்புதலை பெறுவதில் உள்ள கால தாமதம் மற்றும் தேவையான தரநிலைகளைப் பின்பற்றாமையினால் நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையில் புலம்பெயர் முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவதில்லை. அதிகாரதன்மையுடைய சிவப்பு நாடாவை தவிர்ப்பதற்கும், சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனையை வழங்குவதற்கும் புலம்பெயர்ந்தோர்களின் முதலீடுகளை மையமாகக் கொண்ட “ஒரு நிறுத்தக் கடை” ஒன்றினை திறத்தல்.



## வளர்ச்சிக்கான மாற்றம்

தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில், திறன் அபிவிருத்தி மற்றும் சமூக மூலதன அபிவிருத்தியை புலம்பெயர்ந்தவர்கள் மேம்படுத்துகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள அபிவிருத்தியில் ஒரு அர்த்தமுள்ள மாற்றம் தொடர்பாக எடுத்துக்காட்டுவதற்கு, புலம்பெயர்ந்தோரின் ஈடுபாட்டிற்கான நீண்ட கால அணுகுமுறையை கையாளுதல்.



**நிறைவேற்றுச் சுருக்கம்:**

யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையானது பொருளாதார அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானம் ஆகிய மூன்று சவால்களை எதிர்கொண்டது. 2015 இல், தற்போதைய அரசாங்கம் பதவியேற்றபோது, யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் சமாதானத்தை உணர்ந்து அதற்கான ஒரு பங்களிப்பாளராக இலங்கையின் புலம்பெயர்ந்தோரை அழைத்தது. இருப்பினும், யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையுடன் இணைந்து ஈடுபடுவதற்கான புலம்பெயர்ந்தோரின் எதிர்ப்பார்ப்பு மற்றும் ஊக்குவிப்பு பற்றிய விரிவான மற்றும் திட்டமிட்ட புரிந்துணர்வு பற்றாக்குறையாக காணப்படுகின்றது. அத்தோடு, இலங்கை அரசு வெளிப்படுத்திய ஆரம்பகட்ட உற்சாகமானது ஒரு ஒத்திசைவான மற்றும் அர்த்தமுள்ள மூலோபாயமாக மாறவேண்டிய தேவையுள்ளது.

இதன் பின்னணியில், 'ஆக்கப்பூர்வமான பங்களிப்புகளை நோக்கிய வேலைத்திட்டம்: யுத்தத்துக்கு பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான இலங்கையின் புலம்பெயர்ந்தோர், மற்றும் சர்வதேச மற்றும் தேசிய ரீதியான தனியார் துறைகளுடன் இணைந்து ஈடுபடுவதற்கான புதிய வடிவங்கள்' எனும் மூன்று வருட ஆராய்ச்சி திட்டமொன்றினை வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA) மேற்கொண்டது. a) யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பல்வேறு பங்காளர்களால் இலங்கையின் புலம்பெயர்ந்தோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள புதிய அர்த்தங்கள் மற்றும் பொறுப்புகள், b) இலங்கையுடன் இணைந்து ஈடுபடுவதற்கு புலம்பெயர்ந்தவர்களுக்கான அடிப்படை உந்துதல்கள் மற்றும் c) இலங்கை அரசிற்கும் பல்வேறு புலம்பெயர்ந்தோர் குழுக்களுக்கும் இடையிலான ஒரு பயனுள்ள பங்களிப்பை உணர்ந்துகொள்வதில் உள்ள முக்கிய விடயங்கள் போன்றவற்றினை புரிந்துகொள்வதே இதன் நோக்கமாக இருந்தது. புலம்பெயர்ந்தோர் தொடர்பாக அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறை பெரும்பாலும் ஒரு தலையானது என்பதே இதன் பொதுவான கண்டறிவாகும். யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் சமாதானம் போன்ற செயற்பட்டியலில், புலம்பெயர்ந்தோருக்கு அரசாங்கம் ஒரு புதிய பங்கினை வழங்கியுள்ளது. சிங்கள ஊடகங்களின் புலம்பெயர் தமிழர் தொடர்பான எதிர்மறையான சித்தரிப்பானது, யுத்தத்திற்கு பின்னரான பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலையான சமாதானத்திற்கான அரசியல் மற்றும் பொருளாதார பங்காளியாக தமிழ் புலம்பெயர் தமிழரை ஈடுபடுத்துகின்ற மற்றும் மீளவரையறை செய்கின்ற அரசாங்கத்தின் செயற்பட்டியலை உணர்த்துவதற்கு தடையாக உள்ளது. இருப்பினும், யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திற்கு முதலீட்டாளர்களாக இருக்கக்கூடிய சில புலம்பெயர்ந்தோர்களின் ஆர்வமானது அரசாங்கத்தின் சரியான கவனத்தினைப் பெறவில்லை. யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்திற்கான ஒரு பயனுள்ள பங்காளியாக இலங்கை புலம்பெயர்ந்தோருடன் இணைந்து ஈடுபடுவதற்கான ஒரு வெற்றிகரமான மூலோபாயம் தற்போதுள்ளதைவிட மிக அதிகமாக இருக்க வேண்டும். இத்தகைய மூலோபாயமானது கவனமாக வடிவமைக்கப்பட்ட, முரண்பாட்டிற்கான உணர்திறன் கொண்ட, தேசிய, பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்தினை ஒருங்கிணைக்கின்ற கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் ஒருங்கிணைந்த மற்றும் விரிவான தொகுப்பு போன்றவற்றினை உள்ளடக்கியிருக்க வேண்டும். புலம்பெயர்ந்தோருக்கு கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழலினை உருவாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் அரசாங்கமானது உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி திட்டங்களை வழங்கக்கூடிய பல்வேறு புலம்பெயர் குழுக்களின் பல திறமைகளை (நிதிக்கு அப்பாற்பட்டவை) மெதுவாக தட்டிக்கொடுக்க வேண்டும்.

பிரதான ஆராய்ச்சி திட்டத்தின் பகுதியாக ஐந்து விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஐந்து தனிப்பட்ட ஆய்வுகள் குறித்து இக்கொள்கைச் சுருக்கமானது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் அறிவிப்பதற்கும் ஒவ்வொரு ஆய்விலிருந்தும் பெறப்பட்ட பரிந்துரைகளின் ஐந்து தனிப்பட்ட தொகுப்புகளை இது வழங்குகின்றது.



# புலம்பெயர் குழுக்களின் பன்முகத்தன்மையை அங்கீகரித்தல் மற்றும் அவர்களின் மாறுபட்ட அடையாள இணைப்புகளை மதித்தல்

# மாறும் பெயர்கள்

புலம்பெயர்தலை மீள்வரையறுத்தல்: **யுத்தத்திற்கு பின்னரான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான விளைவுகள்**

## பின்னணி

புலம்பெயர் குழுக்களை 'வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள்' என மீள்பெயரிடுகின்ற ஒரு முக்கியமான நடவடிக்கையினை அண்மையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டது. இந்த புதிய பெயர் மாற்றமானது சில சர்ச்சைகளை எழுப்பியுள்ளதோடு அரசாங்கத்தின் அடிப்படை நோக்கங்கள் மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி முயற்சிகளில் புலம்பெயர்ந்தோரின் ஈடுபாட்டிலுள்ள சாத்தியமான தாக்கங்கள் தொடர்பான சில கேள்விகளையும் எழுப்பியுள்ளது. மேலும், 'வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள்' என்ற சொல்லின் சீரற்ற பயன்பாட்டினால், புலம்பெயர்ந்தோர் தொடர்பான புரிதல், அணுகுமுறை மற்றும் கொள்கை போன்றவற்றினை அரசாங்கம் கொண்டிருக்கின்றதா என்பது தொடர்பாக பல்வேறு அரச பங்காளர்களும் கூட கேள்வி எழுப்புகின்றனர். அரசாங்கத்தின் இப்புதிய பெயரிடலானது அனைத்தும் உள்ளடங்கிய ஒன்றாகும். இலங்கை புலம்பெயர்ந்தோரின் பல்வகைப்பட்ட பண்பினை இது தூண்டக்கூடியதாக இல்லை அத்தோடு இனம் அல்லது மதம் சார்ந்த எந்தவொரு குறிப்பையும் இது தவிர்க்கின்றது. அனைத்தும் உள்ளடக்கிய இந்த பெயரிடலானது இலங்கையர்களின் ஒரே தேசிய அடையாளத்தின் கீழ் அறியப்பட்ட ஒற்றுமையினை அடிப்படையாகக் கொண்டது என்பதோடு இது யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டதாகும். அரசாங்கத்துடனான அரசியல் உறவானது, இலங்கை அரசிற்கும் ஏனைய வேறுபட்ட இலங்கை புலம்பெயர்ந்தோர் குழுக்களுக்கும் இடையிலான சச்சரவு போலன்றி இத்தகைய அணுகுமுறையானது குறிப்பிட்ட நாடுகளில் (அதாவது புலம்பெயர் இந்தியர்கள்) சில புலம்பெயர்ந்தோர் குழுக்களுடன் நன்றாக செயற்படலாம். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் பாரிய அரசியல் பண்பு காரணமாக இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் எந்தவொரு மீள்பெயரிடல் செயற்பாடும் சர்ச்சைக்குரியதாக உள்ளது. இலங்கையின் புலம்பெயர்ந்தவர்களின் மீள்வரையறை மற்றும் அவற்றின் புதிய பங்களிப்பு ஆகியன உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டில் ஈடுபடல் போன்றவற்றின் விளைவாக இருக்க வேண்டும் அத்தோடு இதில் பல்வேறு புலம்பெயர்ந்தோர் குழுக்கள் தமக்கான குரலை எழுப்புகின்றன.

## அணுகுமுறை

அரசியல் வன்முறை, அடக்குமுறை மற்றும் சிவில் யுத்தம் போன்ற எண்ணற்ற இலங்கையின் வரலாற்று சூழ்நிலையில் அமைந்திருக்கும் இரண்டாம் நிலை மற்றும் முதல் நிலை தரவுகளைப் பொறுத்து, புலம்பெயர்ந்தவர்களுக்கான வேறுபட்ட அர்த்தங்கள் எவை மற்றும் வேறுபட்ட புலம்பெயரந்தோர் குழுக்களுக்கு 'வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள்' எனும் பெயரை அரசாங்கம் பயன்படுத்தி என்ன செய்கின்றது மற்றும் இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னர் புலம்பெயர்ந்தவர்களின் ஈடுபாடு தொடர்பாக இந்த மீள்பெயரிடலின் விளைவுகள் யாவை போன்ற கேள்விகளை எமது ஆய்வானது வினவுகின்றது.

## முக்கிய கண்டறிவுகள் மற்றும் விளைவுகள்

அரசாங்கத்தின் இப்புதிய பெயரிடலானது வேறுபட்ட காரணங்கள் மற்றும் போக்குகள் காரணமாக இலங்கையின் வேறுபட்ட மக்கள் குழுக்கள் வெளிநாட்டில் சென்று குடியேறிய நிலையை பிரதிபலிக்கவோ மதிக்கவோ இல்லை. குறிப்பாக வன்முறை மற்றும் யுத்தம் காரணமாக கட்டாயத்தின் பேரில் புலம்பெயர்ந்தவர்களுக்கு இப்புதிய பெயரிடலை பிரயோகிப்பது சிக்கலானதாகும். 'சிங்கள-பௌத்த அரசுடன்' ஒப்பிடுகின்ற இலங்கை அரசின் பிரத்தியேக தன்மையைத் தொடர்ந்து போட்டியிடுவதற்கும் சவாலிடுவதற்கும் கடினமாக உழைக்கின்ற புலம்பெயர் குழுக்களுக்கு அரசாங்கத்தின் இப்புதிய வரையறையானது சர்ச்சைக்குரியதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் தற்போதைய பெயரிடலானது, யுத்தத்திற்கு வழிவகுக்கும் அடிப்படை சிக்கல்களை அரசியல்மயமாக்கல், வலிமிகுந்த அனுபவங்களின் குறைந்தளவான காட்சிப்படுத்தல் மற்றும் புலம்பெயர் இலங்கையரின் வேறுபட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களின் போக்குகள் போன்றவற்றின் ஒரு நடைமுறையாக இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக, போருக்கு பின்னரான நல்லிணக்கம், நீதி மற்றும் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த பாதைகளின் கூட்டு முனைப்புக்காக இப்புதிய பெயரிடலை நாங்கள் கண்டறிந்தோம்.

## பரிந்துரைகள்

- 'வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களான' அனைத்து புலம்பெயர் குழுக்களின் தன்னிச்சையான மீள்வரையறையை அரசாங்கம் தவிர்க்க வேண்டும். புலம்பெயர் குழுக்களின் பலவித தன்மையை இது அங்கீகரிக்க வேண்டும் மற்றும் அவர்களின் பல்வேறு அடையாள கூட்டமைப்புகளை மதித்தல் வேண்டும், அவை இன, பிராந்திய, தலைமுறை சார்ந்தவையாக இருக்க வேண்டும்.
- எந்தவொரு மீள்வரையறை சார்ந்த நடைமுறையும் அனைத்து புலம்பெயர் குழுக்களை குறிப்பாக, கடினமாக உழைக்கின்ற குழுக்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.
- மீள்வரையறை தொடர்பான ஒரு வழக்கமான மற்றும் நீண்டகால மூலோபாய கலந்தாலோசனை செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு பெரும்பான்மையான புலம்பெயர்ந்தோர் குழுக்கள் வாழுகின்ற நாடுகளில் அரசு தனது வெளிநாட்டு இராஜதந்திர நடவடிக்கைகளை பயன்படுத்த வேண்டும். பணிகளில் ஒரு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஊழியர் உறுப்பினர்களின் மூலம் வழக்கமான நேருக்கு நேரான தொடர்புகளினூடாகவும், தனிப்பட்ட புலம்பெயர்ந்தோர் உறுப்பினர்கள் இரகசியத்தன்மையுடன் தங்களை வெளிப்படுத்தக்கூடிய ஒரு கண்காணிக்கப்பட்ட கணினி மூலமான ஆலோசனைத் தளத்தினை உருவாக்குவதன் மூலமாகவும் இது மேற்கொள்ளப்படலாம்.

## புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக சிங்கள ஊடகங்களிடம் நிலவுகின்ற எதிர்மறையான கட்டமைப்பினை எதிர்த்தல்: நல்லிணக்கம் மற்றும் சமாதானம் போன்றவற்றுக்கான நீடித்த பொது தகவல் மூலோபாயத்தினை அறிமுகப்படுத்தல்.



# மாறும் கண்ணோட்டங்கள்

சிங்கள ஊடகம் மற்றும் புலம்பெயர்ந்தோர்: **கண்ணோட்டங்கள் மற்றும் விளைவுகள்**

## பின்னணி

புலம்பெயர்ந்தவர்கள் குறிப்பாக தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக ஒரு நேர்மறையான தோற்றத்தினை நிறுவுவதற்கு அரசாங்கமானது தற்போது விரும்புகின்றது. இந்த முயற்சிகள் அரசுக்கு சொந்தமான ஊடகங்களால் மேற்கொள்ளப்படுவதோடு தனியார் அரச சார்புடைய ஊடகங்களும் உதவியினை வழங்குகின்றன.

இருப்பினும், புலம்பெயர்ந்தோர் பிரச்சினைகள் தொடர்பாக ஒட்டுமொத்த இலங்கை ஊடகமும் (பதிப்பு மற்றும் இலத்திரனியல்) பிரிக்கப்பட்டுள்ளன. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர்ந்தவர்களை நோக்கிய குறிப்பாக புலம்பெயர் தமிழர்களை நோக்கிய சிங்கள ஊடகங்களின் மனப்பாங்கு எதிர்ப்புணர்ச்சியுடையதாகவே காணப்படுகின்றது. பிரதான அரசியல் கட்சிகளுக்கு மத்தியிலான/இடையிலான குறுகிய ஆர்வம் மற்றும் ஆரோக்கியமற்ற பிளவுகளால் உருவாகிய தற்போதைய நச்சு அரசியல் சூழ்நிலை காரணமாக இந்நிலைமை மாறாது.

## அணுகுமுறை

சிங்கள மொழியில் பொதுக்களத்தில் அச்சு மற்றும் மின்னணு ஊடகம் மூலம் பெறப்பட்ட இரண்டாம் நிலை இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக்கற்கை ஒன்றினை இந்த கொள்கைச் சுருக்கம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இலங்கையின் புலம்பெயர்ந்தோர் தொடர்பான அண்மைய பத்திரிகை செய்திகளை இம்மாதிரி உள்ளடக்கியுள்ளது. பின்வரும் முக்கிய கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன - சிங்கள ஊடகங்கள் புலம்பெயர்ந்தோர் தொடர்பான கருத்துக்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றன? புலம்பெயர்ந்தோர் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தின் பிரசங்கத்தினை சிங்கள ஊடகங்கள் எவ்வாறு வெளியிடுகின்றன? யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் இன நல்லிணக்கம் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் ஈடுபாடு போன்றவற்றினை சிங்கள ஊடகங்கள் எவ்வாறு ஊக்குவிக்கின்றன/ஊக்கமிழக்கச் செய்கின்றன?

## முக்கிய கண்டறிவுகள் மற்றும் விளைவுகள்

யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கப் பேச்சு வார்த்தைகளில் புலம்பெயர்ந்தவர்கள் மீதான அரசாங்கத்தின் விருப்பு வெறுப்பு கலந்த கவனயீனமானது, பொதுமக்களுக்கான தகவல்கள் மற்றும் தவறான தகவல்களை கையாளுவதற்கு அரசாங்கத்துக்கு எதிரான மற்றும் தமிழ் ஊடகங்களுக்கு எதிரான பேச்சுவார்த்தைகளை உருவாக்கியது. புலம்பெயர் தமிழர்களுடனான அரசாங்கத்தின் ஈடுபாடுகள் பெரும்பாலும் உணர்ச்சிபூர்வமான வகையில் பதிவாகியுள்ளதோடு வெறுப்பு, அவநம்பிக்கை மற்றும் விலக்கப்படுதல் போன்ற உணர்வினை தூண்டுவதற்காக பயன்படுத்தப்பட்டது. புலம்பெயர் தமிழர்களை நோக்கிய அரசாங்கத்தின் சாதகமான அசைவுகளானது, பெரும்பான்மையான சிங்கள ஊடகத்திலிருந்து எதிர்மறையான கவனத்தைப் பெற்றுள்ளதோடு அத்தகைய அசைவுகள் பெரும்பாலும் 'தேசத்தின் காட்டிக்கொடுக்கும்' செயல்களாகவும் விடுதலைப் புலிகளுக்கு 'விற்கின்ற' செயல்களாகவும் கட்டமைக்கப்பட்டன. பல்வேறு சிங்கள அரசியல் மேல்மட்டக் குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் மத்தியிலும் நிகழ்கின்ற எண்ணற்ற பதற்றங்களைக் கொண்டிருக்கும் தற்போதைய அரசியல் சூழலில் இத்தகைய எதிர்மறையான தகவல் மேலும் அதிகரிக்கின்றது. ஒட்டுமொத்தமாக, புலம்பெயர்ந்தோருடனான தற்போதைய அரசாங்கத்தின் அரை மனது கொண்ட மற்றும் எதிர்வினை ஊடக ஈடுபாடானது, தமிழ் புலம்பெயர் தமிழர்களின் நேர்மறையான தோற்றத்தினை உருவாக்குவதற்கு உதவுவதில்லை இதனால் யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தி திட்டங்களில் ஒரு முக்கியமான மற்றும் சட்டப்பூர்வமான பங்காளியாக அவர்களை மாற்றுவதற்கான வாய்ப்புகளை இது தடுக்கின்றது.

## பரிந்துரைகள்

- ஊடகத்தினை நடத்துவதற்கான தொழில் ரீதியான தரங்களை அமுல்படுத்துவதன் மூலம் புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான சிங்கள ஊடகங்களின் எதிர்மறையான சித்தரிப்புகளை எதிர்கொள்ளுதல், நல்லிணக்கம் மற்றும் சமாதானத்திற்கான தேசிய திட்டங்களுடன் புதிய நீண்டகால தேசிய பொது தகவல் மூலோபாயத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம்.
- தொழில்முறை ஊடக தரநிலைகள், நெறிமுறைகள் அத்தோடு பிரமாணங்களை கடைப்பிடிப்பவர்கள் மற்றும் கடைப்பிடிக்காதவர்களுக்கான உறுதியான ஊக்குவிப்பினை அரசு வழங்க வேண்டும்.
- புலம்பெயர்ந்தோரின் ஈடுபாடுகள் தொடர்பான நேர்மறையான ஊடக அறிக்கையினை (இது பெரும்பாலும் ஆங்கிலப் பத்திரிகைகளில் உள்ள கருத்து தெரிவிக்கும் கட்டங்களில் காணப்படுகின்றது) மொழிபெயர்த்து விநியோகித்தல் அதாவது, உள்ளூர் மொழிகளில் மொழிப்பெயர்த்து அவற்றினை உள்ளூர் ஊடகங்களில் மறுபடியும் வெளியிடுதல்.
- புலம்பெயர்ந்தோர் தொடர்பான எதிர்மறையான கருத்துக்களை எதிர்கொள்வதற்கும் நேர்மறையான விளக்கங்களை பரப்புவதற்கும் சமூக ஊடக பிரச்சாரங்களை தொடங்குதல்.
- இரண்டாம் நிலை பாடசாலை மற்றும் மூன்றாம் நிலை பாடத்திட்டத்திற்கு ஊடக எழுத்தறிவினை அறிமுகப்படுத்தல்



# சுற்றுலாத்துறையில் புலம்பெயர்ந்தோர் முதலீடுகளை ஈடுபடுத்துவதற்கான உறுதியான ஊக்கத் திட்டமொன்றினை தொடங்குதல்

# மாறும் வாய்ப்புகள்

**சுற்றுலாத்துறையில் புலம்பெயர்ந்தவர்களின் ஈடுபாடு: ஊக்குவிப்புகள் மற்றும் சிக்கல்கள்**

## பின்னணி

2015 ஜனவரியில் பதவிக்கு வந்ததிலிருந்து குறிப்பாக, சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக தற்போதைய அரசானது புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து முதலீடுகளை எதிர்பார்க்கின்றது. இந்த அணுகுமுறையானது, யாழ்ப்பாண முதலீட்டாளர் சங்கம் மற்றும் வடமாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தேவை மதிப்பீட்டினால் வசதிப்படுத்தப்பட்டது. இத்தகைய உயர்மட்ட முயற்சிகள் இருந்த போதிலும், சுற்றுலாத்துறை தொடர்பில் புலம்பெயர்ந்தவர்களின் முதலீட்டினை ஈர்ப்பதற்கான தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறையானது பெரும்பாலும் சொல்லாட்சியில் இயங்குவதாகவும் 'குற்றச்செயல்களின்' குற்ற உணர்வுகளுக்கு உட்பட்டதாகவும் காணப்படுகின்றது. அரசாங்கம் ஒரு ஒத்திசைவான, சீரான, தேவை ஊக்கம் சார்ந்த மற்றும் முரண்பாடுகளுக்கு உணர்திறனுள்ள முதலீட்டு மூலோபாயத்தினை கொண்டிருக்கவில்லை. இது குறிப்பாக சுற்றுலாத்துறையிலுள்ள சிறிய மற்றும் இடைக்கால முதலீடுகளுக்கு பொருத்தமானதோடு உயர் மட்ட சுற்றுலா முயற்சிகளுக்கான முதலீட்டினை இலக்கு வைத்து, அரசாங்கத்தின் ஆர்வத்தினால் இது குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, வடக்கு மற்றம் கிழக்கு அதேபோல தேசிய ரீதியிலான தேவைகளின் முன்னுரிமையின்படி ஒரு தீவிர முதலீடு அவசியமானதாக இருப்பதோடு, சுற்றுலாத்துறையில் புலம்பெயர்ந்தவர்களின் முதலீடானது சிதறிய நிலையில் காணப்படுகின்றது. அவற்றின் வளர்ச்சி நிர்வகிக்கப்படாததோடு நிலைபேறற்றதாகவும் காணப்படுகின்றது.

## அணுகுமுறை

பின்வரும் முக்கிய கேள்விகளுக்கான பதிலை கண்டறிவதற்காக எமது ஆய்வானது முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவினை சேகரித்தது - யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறையின் மீது புலம்பெயர்ந்தவர்களின் முதலீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புகள் யாவை? சுற்றுலாத்துறை மீதான புலம்பெயர்ந்தோர் முதலீட்டிற்கான சாத்தியமான காரணிகள் மற்றும் தடைகள் யாவை? உந்துதல்கள், துணிகர விவரங்கள், கிடைக்கக்கூடிய வசதிகள் மற்றும் முதலீட்டு விவரங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச சபை பிரிவுகளிலுள்ள விடுதிகள் மத்தியில் நிர்வகிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட கேள்விப்பட்டியல் ஒன்று அதாவது 'அடையாளம் காண்பதற்கான கருவி' ஒன்றினை நாங்கள் பயன்படுத்தியுள்ளோம். சுற்றுலாத்துறையில் அதிகளவான புலம்பெயர்ந்தோர் முதலீடுகளைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தின் நல்லூரிலுள்ள சுற்றுலாத்துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல புலம்பெயர் முதலீட்டாளர்களுடன் அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களை நடாத்தினோம்.


## முக்கிய கண்டறிவுகள் மற்றும் விளைவுகள்

சுற்றுலாத்துறையிலுள்ள பெரும்பான்மையான புலம்பெயர்ந்தோர் முதலீடுகளானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவன மட்டத்தில் காணப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கிற்கு (அதாவது, நல்லூர் பண்டிகை காலத்தில்) வருகை தரும் தமிழ் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து அவர்கள் தமது பருவகால கேள்வியை ஈடுசெய்து கொள்கின்றனர். புலம்பெயர்ந்தோரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாறான பெரும்பாலான வியாபாரங்கள் அவர்களுக்கு மேலதிக வருமானம் ஈட்டக்கூடியதாகவே காணப்படுகின்றன. சில நன்கொடை நோக்கமுடையதாக (அதாவது, குடும்ப உறுப்பினர்களுக்கு உதவி செய்தல்) காணப்படுகின்றன. இத்தகைய வேறுபட்ட உந்துதல்களானது, ஒரு தீவிரமான வணிக கண்ணோட்டமற்று காணப்படுவதோடு தற்போதைய முதலீடுகளை நிலைபேறற்றதாக செய்கின்றன. (சிறிய) அளவீடுகளுக்கேற்ப, ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார வளர்ச்சியில் இச்சிறிய வியாபாரங்களின் உண்மையான பங்களிப்பு பற்றிய சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய முதலீடுகளானது, எண்ணற்ற அரச மற்றும் பிராந்திய ஒழுங்குமுறை இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றன. தற்போது, இத்தகைய முயற்சிகளை அரசு அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கவில்லை இதனால், அவர்களின் முறையான அமைப்பிற்கு எந்தவித ஊக்குவிப்பும் (அதாவது, வரி மற்றும் கடனை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள்), இறுதியான அளவிடலை மேற்கொள்வதற்கான உதவியும் வழங்கப்படுவதில்லை. பிராந்திய மட்டத்தில், யாழ்பாணத்திலுள்ள உள்ளூர் அதிகாரிகளின் ஆதரவினை அவர்கள் பெற்றிருக்காததோடு அதிகாரத்தன்மையுடைய சவால்களையும் (அதாவது, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சபையில் பதிவுசெய்கின்ற போது) பூர்த்தி செய்யப்பட்ட சான்றிதழ்களை (Certificate of Completion-CoC) பெற்றுகொள்வதிலுள்ள தடைகளையும் எதிர்கொள்கின்றனர், இதனால் அவர்கள் அரசியல்மயமாக்கல் மற்றும் அரசியல் ஆதரவாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம்.

## பரிந்துரைகள்

- வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தேசிய மற்றும் பிராந்திய அதிகாரிகள், விரிவான அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சுற்றுலாத்துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அபிவிருத்தியை இலக்காக கொண்ட செயல்திட்டத்தினை உருவாக்க வேண்டும்.
- சுற்றுலாத்துறையில் புலம்பெயர்ந்தோரின் முதலீட்டிற்கான ஒரு உறுதியான ஊக்கத்திட்டத்தை (பணம் மற்றும் பணமல்லாத) அரச அதிகாரிகள் தொடங்க வேண்டும்.
- தற்போதைய சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒரு தரமான கட்டுப்பாட்டு நுட்பத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும்.
- பிராந்திய அதிகாரிகள் உதவியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் முன்னணி வணிகப் பாடசாலைகள், விடுதி பாடசாலைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சுற்றுலாத்துறையில் ஆதரவு வழங்குவதற்காக இப்பகுதியில் காணப்படும் வெற்றிகரமான முயற்சிகளுடனான பயிற்சி மற்றும் வழிகாட்டும் திட்டங்கள் போன்றவற்றுடன் கூடிய பயிற்சியளித்தல் மற்றும் திறனைக் கட்டியெழுப்புகின்ற பங்களிப்பு போன்றவற்றில் ஈடுபடவேண்டும்.
- வெளிவிவகார அமைச்சு ஒரு தன்னார்வ வெளிநாட்டு சேவை (Voluntary Service Overseas-VSO) பரிமாற்று திட்டத்தினை செயல்படுத்த வேண்டும், தனிநபர் வியாபாரம் மற்றும் துறையின் வளர்ச்சிக்கு பொருத்தமான அறிவு மற்றும் திறன்களைத் தன்னார்வ தொண்டு செய்ய தயாராக இருக்கின்ற புலம்பெயர்ந்தோர் மற்றும் உள்நாட்டு இளைஞர்களுடன் புலம்பெயர் வியாபார உரிமையாளர்கள் மற்றும் உள்நாட்டு செயற்பாட்டாளர்களை இணையச் செய்தல்.
- புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கும் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கும் இடையில் ஏற்படும் அழுத்தங்களை தீர்த்துக்கொள்ள உரையாடல் மற்றும் நடுநிலை போன்றவற்றுக்கான திறமைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள சிவில் சமூக அமைப்புக்களைப் பெறுதல்.

## புலம்பெயர்ந்தோர் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அதிகாரத்தன்மையுடைய சிவப்பு நாடாவை தவிர்த்தலும், சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனையை வழங்குதலும்



# மாறும் இடங்கள்

**கொழும்பில் நில, வீடு மற்றும் கட்டுமான துறை மீதான முதலீடுகள்: உந்துதல்கள் மற்றும் சிக்கல்கள்**

## பின்னணி

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் பௌதிக நிலப்பரப்பு விரைவான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகள் காளான்களை போல வளர்ச்சியடைந்திருப்பற்கேற்ப வெள்ளவத்தை போன்ற பிரதேசங்களில் அதிகரித்துவரும் நகரமயமாக்கல் மற்றும் வணிக வீட்டு வளாகங்கள் போன்றன இந்த மாற்றத்தை காட்டிநிற்கின்றன. நகரப்புற சொத்து மேம்பாட்டு துறையில் ஒரு உயர்வு ஏற்பட்டுள்ளது. தற்போது, நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையில் புலம்பெயர்ந்தவர்களின் முதலீட்டின் திடீர் அதிகரிப்பில் ஏற்பட்டுள்ள ஒரு இக்கட்டான நிலை அல்லது ஒரு சரிவினை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். வெள்ளவத்தை விவகாரத்தில், வழங்கலானது கேள்வியை விட அதிகரித்திருப்பதோடு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கேள்வி நகர்பபுற பிரதேசங்களில் இருந்து தெஹிவளை, கல்கிசை , கொட்டாஞ்சேனை மற்றும் கோட்டை போன்ற புதிய புறநகர்ப் பகுதிகளை நோக்கி நகர்வடைகின்றது. நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையில் புலம்பெயர்ந்தவர்களின் முதலீடானது தொடர்ந்து நிலைத்திருந்தால் மற்றும் அரசாங்கத்தின் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இருந்தால், துறையில் உள்ள புலம்பெயர்ந்தோர் முதலீடுகள் பற்றிய பல சிக்கல்களை இது அடையாளப்படுத்த வேண்டும்.

## அணுகுமுறை

இந்த கொள்கைச் சுருக்கமானது, கொழும்பிலுள்ள நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையில் முதலீடு செய்ய புலம்பெயர் தமிழர்களுக்கான உந்துதல்கள் யாவை? மற்றும் புலம்பெயர்ந்தோர் முதலீடுகள் எதிர்கொள்கின்ற சவால்கள் யாவை? போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்ற ஆய்வொன்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சொத்து சந்தையின் வளர்ச்சிக்கேற்ப வெள்ளவத்தைப் பிரதேசத்தில் நகரப்பகுதி எவ்வாறு மாறி வருகின்றது என்பதைப் புரிந்து கொள்வதற்கு 'வரைபட ரீதியான செயன்முறை' ஒன்றினை பயன்படுத்தி முதல்நிலை பண்புசார் தரவுகளை நாங்கள் சேகரித்தோம். நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA), மாநகர சபை மற்றும் அடுக்குமாடி அபிவிருத்தி அதிகாரசபை, தனியார்த்துறை மற்றம் கல்வித்துறை நிபுணர்கள், தனியார் சொத்து உருவாக்குனர்களுடன் 19 அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் நடாத்தப்பட்டன அத்தோடு உரிமையாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்குச் சொந்தமான நகர்ப்புற அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியேறியவர்களுடன் 6 முறைசாரா மற்றும் ஆழமான நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. இந்த ஆய்வானது இரண்டாம் நிலை தரவுகளாக கணக்கெடுப்பு அறிக்கைகளையும், முதலீட்டு சபை (BOI) மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகளை பட்டியலிடுகின்ற ஆவணங்கள் போன்றவற்றினை பயன்படுத்தியுள்ளது.

## முக்கிய கண்டறிவுகள் மற்றும் விளைவுகள்

2009 இற்குப் பின்னர், நாட்டின் தலைநகரான கொழும்பிலுள்ள குடியிருப்புகளுக்கு புலம்பெயர் தமிழர்களிடமிருந்தான கேள்வி திடீரென அதிகரித்தது. புலம்பெயர் தமிழர்களின் குடிப்பெயர்வின் அதிகரிப்பிற்கேற்ப இப்போக்கு சிறிது காலம் தொடர்ந்தது. வெள்ளவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான புலம்பெயர் தமிழர்களின் அதிகரித்த கேள்வியின் பின்னணியில் முக்கிய உந்துதல்களாக பாதுகாப்பு மற்றும் வசதிகளின் வளர்ச்சி காணப்படுகின்றது. குறைந்த அளவில் நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகளால் இது ஊக்குவிக்கப்படுகின்றது. முதலீட்டிற்கான குறைந்தளவான வருமானம் மற்றும் அதிகளவான பராமரிப்புச் செலவுகள் காரணமாக நிலம், வீடு, சொத்து விற்பனை துறையில் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளது. முதலீடு, குத்தகை, குடியிருப்பில் சொந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கைக்கு வழிவகுத்தல் போன்றவற்றுக்கு தற்போது புலம்பெயர்ந்தவர்களுக்கு சட்ட, நிர்வாக மற்றும் சமூக தடைகள் பல இருக்கின்றன. சட்டத்தடைகளைப் பொறுத்தவரை, வெளிநாட்டவர்களால் சொத்துக்களை உடைமையாக வைத்திருப்பதற்கான அரசின் கட்டுப்பாடுகளை குறிப்பிடலாம். தற்போதைய கட்டுப்பாடுகளின் படி, வெளிநாட்டில் குடியுரிமையுள்ள புலம்பெயர்ந்த முதலீட்டாளர்கள் அடுக்குமாடி குடியிருப்பில் நான்காவது மாடிக்கு மேல் மட்டுமே வீடுகளை சொந்தமாக வைத்திருக்க வேண்டும். இத்தகைய சட்டங்கள் உள்நாட்டு உறவினர்கள் மூலமாக சொத்துக்களை வாங்குவதற்கான முறைசாரா ஏற்பாடுகளை மேற்கொள்ள வழிவகுத்தன. மேலே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளானது, வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் லட்சியத்தை பிரதிபலிக்கவில்லை. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் புதிய வரிவிதிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நிதியமைச்சினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளானது நிலம், வீடு, சொத்து விற்பனை சந்தையில் புலம்பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் முதலீடுகள் மீதான விளைவுகளை ஊக்கமிழக்கச் செய்வதை காட்டுகின்றன. சாத்தியமான புலம்பெயர் முதலீட்டாளர்களின் குறைந்தளவான அந்நியச்செலாவணி காரணமாக அம்முதலீட்டாளர்கள் வங்கிக் கடன்களை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பெரியளவிலான முதலீடுகளை ஈர்ப்பதில் இருந்த BOI இன் ஒரே கவனம் அத்தோடு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான புலம்பெயர் முதலீட்டாளர்களை இலக்காகக் கொண்ட சிறப்புக் கொள்கைகளை கொண்டிருக்காமை போன்றன எதிர்கால முதலீட்டிற்கான ஏனைய தடைகளாக காணப்படுகின்றன.

தேவையான தரநிலைகளை கொண்டிருக்கின்ற புலம்பெயர் முதலீட்டாளர்கள் மற்றும் ஒரு கடினமான நிலையில் சொத்துக்களின் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நகராட்சி அளவில், தரமான சான்றிதழ்கள் மற்றும் சொத்து உருவாக்குனர்களுக்கு ஒப்புதல் பெறுவதலில் நீண்ட தாமதங்கள் இல்லை. அரசாங்கத்தின் தெளிவற்ற விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளானது, தனியார் சொத்து உருவாக்குனர்களுக்கு ஏற்கனவே உள்ள விதிகளை இயக்க உதவுகின்றது. இத்தகைய தன்னிச்சையான முறைசாரா விதிகளானது, நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை அணுகுவதற்கான நீண்டகால தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதோடு சொத்து பத்திரத்தை பரிமாற்றியதன் பின் சொத்து உருவாக்குனர்கள் விரைவாக காணாமல் போய்விடுகின்றனர். அரசாங்கத்தின் தற்போதைய மோசமான தரநிர்ணய நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் குறைந்த செயலாற்றும் திறன் போன்றன எண்ணற்ற தற்காலிக முறை, நடைமுறைகள் அடிப்படையிலான ஊழல் மற்றும் ஆதரவினை அடிப்படையாகக் கொண்ட தற்காலிக மற்றும் முறைசாரா தீர்மானங்களை அதிகரிக்கின்றன. கொள்கையளவில், UDA, மாநகர சபை மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு முகாமைத்துவ அதிகார சபை (CMA) போன்றன தரநிலைகளை பராமரிப்பதாகக் கூறுகின்றன. உண்மையில் நடைமுறையில், ஆக்கிரமிப்பாளர்களின் நல்வாழ்வுக்காக சொத்து உருவாக்குனர்கள் மீது ஒரு பக்கச்சார்பான தன்மை காணப்படுகின்றது.

## பரிந்துரைகள்

- அதிகாரதன்மையுடைய சிவப்பு நாடாவை தவிர்ப்பதற்கும், சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனையை வழங்குவதற்கும் புலம்பெயர்ந்தோர்களின் முதலீடுகளை மையமாகக் கொண்ட கொழும்பு மாநகர சபை மற்றும் ஏனைய பிரதேசங்களில் 'ஒரு நிறுத்தக் கடை' ஒன்றினை திறத்தல்.
- சொத்து சந்தையில் புலம்பெயர்தவர்களிடம் இருந்து நடுத்தர அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஊக்குவிப்புகளை வழங்காத தற்போதைய பக்கச்சார்புடைய வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) அணுகுமுறையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யவேண்டும்.
- தவணைமுறையில் கொள்வனவு செய்கின்ற போது வங்கி சம்பந்தப்பட்ட சிக்கல்களை எதிர்கொள்வதற்கு புலம்பெயர்ந்தோரை மையப்படுத்திய கடன் பத்திர திட்டமொன்றினை உருவாக்குதல்.
- அடுக்குமாடி குடியிருப்பு ஆக்கிரமிப்பாளர்களின் நன்மைக்காக, மாநகரங்கள் தரமான சேவைகளை உறுதிப்படுத்த வேண்டும்.



தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கும், நுழைவுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுவதற்கும், அபிவிருத்திக்கான தடையை நீக்குவதற்கும் புலம்பெயர் குழுக்களுக்கான ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்றினை அனைத்து பிராந்திய மட்டங்களிலும் நிறுவுதல்

# வளர்ச்சிக்கான மாற்றம்

**ஒருங்கிணைந்த புலம்பெயர்ந்தோர் ஈடுபாடு: யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கையாளுதல்**

## அறிமுகம்

2015 இல் இலங்கையில் யுத்தத்திற்கு பின் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினை தொடர்ந்து, ‘புலம்பெயர் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒன்றிணைந்த தலையீடுகளின் மாதிரி’ குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நேரடியாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிரபல்யமடைந்தது. அவுஸ்ரேலியா, ஐக்கிய இராச்சியம், கனடா போன்ற நாடுகளில் இருந்து முக்கியமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரவிவரும் பரந்த புலம்பெயர் அமைப்புகளால் நடைமுறைப்படுத்தப்படும் இத்தகைய தலையீடுகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி தொடர்பான சவால்களை எதிர்கொள்வதில் கூட்டு முயற்சிகளாக செயற்படுகின்றன.

இந்த நிறுவனங்களில் அநேகமானவை யுத்தத்திற்கு பின் உடனடியாக தமது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த போதிலும், குறிப்பாக 2015 ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் அவை மேலும் விரிவாக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் ஏனைய பாரம்பரிய அபிவிருத்தி நிறுவனங்களை மாற்றியமைக்கின்றன ஆனால், அடிப்படையில் புலம்பெயர்ந்தோர் மற்றும் சர்வதேச உதவி நிறுவனங்களால் நிதியளிக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் அதேபோல பன்முக மற்றும் இருமுக உதவி நிறுவனங்களிலிருந்து பாதுகாப்பான நிதியினைப் பெற்றுகொள்வதற்கு ஒரு சில நிறுவனங்கள் காணப்படுகின்றன. தலையீடுகள், இடம் மற்றும் பயனாளிகளின் வகைகளை தேர்ந்தெடுப்பதில் இலங்கையில் செயற்படுகின்ற ஏனைய அபிவிருத்தி நிறுவனங்களுக்கு ஒத்த செயற்பாட்டு மாதிரிகளை அவர்கள் பின்பற்றி அபிவிருத்திக்கான ‘சுயமாக வரையறுக்கப்பட்ட’ பாதையொன்றின் மூலம் குறிப்பாக, அவர்களின் சொந்த பிரதேசங்களை இலக்கிடுவதன் மூலம் இயக்கப்படுகின்றன. ஏனையவற்றின் மத்தியில், பெண்கள், சுற்றுலா, மற்றும் சமய நிறுவனங்கள், கலை மற்றும் கலாசாரம் போன்றவற்றின் மீதான கூடுதல் கவனத்துடன் கல்வி, சுகாதாரம், வீடு, நிலம், வாழ்வாதாரங்கள் போன்றன தலையிடக்கூடிய பகுதிகளாக காணப்படுகின்றன.

இருப்பினும், சர்ச்சையில் சிக்காத புலம்பெயர்ந்தவர்களின் அபிவிருத்தி தலையீடுகள் இல்லை. சில நேரங்களில், ஏனைய அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அணுகுமுறைகளுடன் முரண்படுவதனால், திட்டமிடப்படாத எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன.

## அணுகுமுறை

இந்த கொள்கைச் சுருக்கமானது பண்புசார் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டதோடு உள்நாட்டு அபிவிருத்தி செயற்பாடுகளின் நிலைப்பேறு மற்றும் உறுதிப்பாடு போன்றவற்றினை புலம்பெயர்ந்தோரின் தலையீடுகள் எவ்வாறு பாதிக்கின்றன? என்ற கேள்விக்கு பதில் கூற முற்படுகின்றது.

இந்த கற்கையில், 20 இடங்களில் புலம்பெயர்ந்தோர் தலையீடுகளின் தன்மை மற்றும் இருப்பு போன்றவற்றை புரிந்துகொள்வதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே இருக்கின்ற அபிவிருத்தி தலையீடுகளை நாங்கள் முதலில் அடையாளம் கண்டோம். புலம்பெயர்ந்தோர் தலையீடுகள் தொடர்பான பெறுமதிமிக்க தரவுகளின் பற்றாக்குறையினை முக்கிய புலம்பெயர்ந்தோர் உறுப்பினர்கள் (முக்கிய தகவலாளர்களாக), அரச பரதிநிதிகள், கல்வியாளர்கள் மற்றும் ஏனைய ஆய்வாளர்களின் உதவியுடன் நாங்கள் அவற்றை அடையாளங்கண்டோம். இத்தகைய ஒவ்வொரு தலையீட்டாளர்களை சந்திப்பதன் மூலமாக மற்றும் செயற்திட்டப் பணியாளர்கள், ஏனைய பங்காளர்கள் அதேபோல பயனாளிகளுடன் முறையற்ற சந்திப்புகளை மேற்கொண்டதன் மூலம் நாங்கள் தரவுகளை சேகரித்தோம். புலம்பெயர்ந்தோர் குழுக்களின் நாடு, செயற்திட்டத்தின் அளவு, தலையீட்டின் இயல்பு மற்றும் இலக்கிடப்பட்ட குழு போன்றவற்றினை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் கற்கைக்கான 6 விடயங்களை நாம் தேர்ந்தெடுத்தோம். இத்தகைய குறிப்பிட்ட திட்டங்களுடன் தொடர்புடைய பங்குதாரர்களை நேர்காணல்களுடன் மேலதிகமாக, பங்குபற்றுனர்களின் அவதானம் மற்றும் ‘பங்குபற்றுதலை அவதானித்தல்’ போன்றவற்றினூடாக தினசரி நடவடிக்கைகள் மற்றும் செயல்திட்ட விளைவுகளைப் புரிந்துகொள்வதற்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் இன அமைப்பியல் தொடர்பான ஆய்வினை நாம் மேற்கொண்டோம். சமூக கண்டுபிடிப்புகள் தொடர்பான திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள், பின்தங்கிய சமூகங்களுக்கான கல்வி நிகழ்ச்சிதிட்டங்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் புணரமைப்பு மற்றும் மறுவாழ்வு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பெறுமதி சங்கிலியின் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு மற்றும் உற்பத்தி அளவிடல் அதிகரிப்பு போன்றவற்றினை இந்த அவதானிக்கப்பட்ட தலையீடானது கவனம் செலுத்துகின்றது. ஒரு கருப்பொருள் பகுப்பாய்வு முறை மற்றும் ரேளைழ பண்புசார் தரவு பகுப்பாய்வு மென்பொருளைப் பயன்படுத்தி நாங்கள் தரவினை பகுப்பாய்வு செய்துள்ளோம்.

## முக்கிய கண்டறிவுகள் மற்றும் விளைவுகள்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆதரிக்கும் வகையில் பல புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களின் வருகையானது யுத்தத்திற்கு பின்னர் இலங்கைக்கு உதவக்கூடிய ஆர்வம் வளர்ச்சியடைந்திருப்பதைக் குறிக்கின்றது. வெளிவிவகார அமைச்சில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான இடத்தினை உருவாக்குதல் மற்றும் சில புலம்பெயர்ந்தோர் மீதான தடைகளை நீக்குதல் போன்றன முக்கிய மைல்கற்களாகும் என்பதோடு இது யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி முயற்சிகளில் புலம்பெயர்ந்தோரின் சாத்தியமான ஈடுபாட்டிற்கு உதவும். தற்போது மற்றும் எதிர்காலத்தில் யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை ஆதரிப்பதே புலம்பெயர்ந்தோரின் பங்காகும்.

புலம்பெயர்ந்தோரின் அபிவிருத்தி தலையீடுகளானது, திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சூழ்நிலையில் பல சாதகமான மாற்றங்களை கொண்டு வருகின்றன. உள்நாட்டு அபிவிருத்தி முயற்சிகளில் ஒரு நிதியாளராக அவர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக, கல்விக்கான அரசாங்க நிதிக்கு பொருந்தும் வகையில் நிதியை வழங்குதலைக் குறிப்பிடலாம். முக்கிய அபிவிருத்தி செயற்பாடுகளில் இருந்து விலக்கப்பட்ட பாதிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கான நிதியினை வழங்குவதானது, புலம்பெயர்ந்தோரால் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு சாத்தியமான மாற்றமாகும். புதிய அறிவுத்திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவு போன்றவற்றின் மூலம் இயலளவு அபிவிருத்தி, சமூக மூலதன அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்புகளில் புலம்பெயர்ந்தவர்கள் முக்கியம் பெறுகின்றனர். மேலும், உள்ளூர் மக்களை வேலைக்கமர்த்துவதன் மூலம் உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு, யுத்தத்தின் காரணமாக அதிகமான மூளைச்சலவை நிறைந்த சூழ்நிலையில் உள்ளூர் திறன்களை அதிகரிக்கக்கூடிய முக்கிய பங்கினை புலம்பெயர்ந்தோர் அமைப்புகளானது மேற்கொண்டுள்ளன.

புலம்பெயர்ந்தோரின் தலையீடுகளின் திட்டமிடப்படாத விளைவுகளானது தவிர்க்க முடியாதவையாகும். நிதி மற்றும் ஒரு குழு ஏனைய குழுவின் (அதாவது, இனக்குழுக்கள், பெண்கள்) மீது கொண்டுள்ள ஏனைய வகையான அதிகாரம் போன்றவற்றுக்கான தலையீடுகளை தேர்ந்தெடுப்பதன் விளைவாக ஏற்படுகின்ற பதட்டங்கள் மற்றும் சமூக பிளவுகள் போன்றவற்றினை அதிகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. மிகக் குறைவான அல்லது வேறுபட்ட அமைப்புகளில் ஒருங்கிணைப்பு இன்மை, ஒன்றிணைந்து செயலாற்றுவதிலுள்ள பற்றாக்குறை, ஒரே நாடுகளில் இருந்து வந்த புலம்பெயர்ந்தோர் அமைப்புகளின் மூலம் ஒரே இடங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் பிரதிசெயல் போன்றன வேறுபட்ட சிக்கல்களுள் குறிப்பிடத்தக்கவையாகும். மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலிடுவதற்கான ஆர்வமானது, வேலைவாய்ப்பு மற்றும் பிராந்திய பொருளாதார வளர்ச்சி போன்ற சில எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் குறைவானதாகவே உள்ளது. இத்தகைய எதிர்மறையான விளைவுகளானது உறுதித்தன்மை, தலையீடுகளின் உரிமை மற்றும் நிலைபேறு போன்றவற்றினை கேள்விக்குள்ளாக்குகின்றன.

## பரிந்துரைகள்

- வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள அபிவிருத்தி பட்டியலின் அர்த்தமுள்ள மாற்றம் தொடர்பாக எடுத்துக்காட்டுவதற்காக, புலம்பெயர்ந்தோரின் ஈடுபாட்டிற்கான நீண்ட கால அணுகுமுறையை கையாளுதல்.
- வேறுபட்ட புலம்பெயர் அமைப்புகள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நிறுவனங்கள், அவர்களின் தற்போதைய முயற்சிகள், ஒத்துழைப்பிற்கான எதிர்கால வாய்ப்புகள், நிதி, மனித மற்றும் ஏனையவற்றின் பங்குகள் போன்ற தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கு ஒருங்கிணைப்பு பொறிமுறை ஒன்றினை மாநில, பிராந்திய.·. மாகாண மற்றும் மாவட்டளவில் நிறுவுதல்.
- யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியில் பங்களிப்பு செய்யக்கூடிய வகையில் புலம்பெயர் குழுக்களுக்கான தகவல்கள், அணுகல், நுழைவுச்சீட்டுகள் மற்றும் அனுமதி போன்றவற்றினை பெற்றுக்கொள்வதில் அரசின் பங்கினை அதிகரித்தல்
- நிலைப்பேறு, இறுதியில் அளவிடுதல், தற்போதைய மற்றும் எதிர்கால அபிவிருத்தி முயற்சிகளின் உள்நாட்டு உரிமை போன்றவற்றின் மீது கவனம் செலுத்துதல்.

## மேலதிக கற்கைக்கு


Arambepola, C., Anver, A. and Lokuge, G. (2018). 'Diaspora Engagement in Post-Crisis Settings: A Review of Literature'. Unpublished report. Colombo: Centre for Poverty Analysis.

Arambepola, C. and Mahilrajah, M. (2018). 'Testing the Waters? Motivational Dynamics of Diaspora Investment in the Tourism Sector in Jaffna.' *Working Paper Series – No. 26*. Colombo: Centre for Poverty Analysis.

Miriyagalla, D. (2018). 'Competing and Collaborating at the Periphery: Small and Medium Enterprises in Post-Conflict Sri Lanka.' *Post-War Perspectives*. Colombo: Centre for Poverty Analysis.

Miriyagalla, D. (2018). 'Sri Lanka's Large-Scale Private Sector with Old and New "Elephants in the Room'." *Post-War Perspectives*. Colombo: Centre for Poverty Analysis.

Nanayakkara, S. (2018). 'Perceptions of Diaspora in Sinhala Media'. Unpublished report. Colombo: Centre for Poverty Analysis.

Thurairajah, T. (2018). 'Space and the City: Small-scale Investment of the Sri Lankan Tamil Diaspora in Colombo, Sri Lanka'. *Working Paper Series – No. 25*. Colombo: Centre for Poverty Analysis.



சமூக கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனம், நெதர்லாந்திலுள்ள Erasmus University Rotterdam போன்றவற்றில் மோதல் மற்றும் சமாதான கற்கைகளுக்கான விரிவுரையாளராக பணியாற்றுகின்ற கலாநிதி. ஷியாமிகா ஜயசுந்தர ஸ்மித்ஸ் அவர்கள் வழங்கிய பங்களிப்பிற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் நன்றியை தெரிவிக்கின்றது.

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA), வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வை தருகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே என்பதை தனது ஆய்வின் முடிவுகளை முற்படுத்தி வலியுறுத்துவதோடு வறுமை ஒழிப்பானது கொள்கை மாற்றம், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது, அதேபோல் வறுமையில் வாடுகின்ற மக்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகின்றது. தேசிய ரீதியாக, பிராந்திய ரீதியாக, துறை ரீதியாக, நிகழ்ச்சிதிட்டம் மற்றும் திட்ட அளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்தி கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்பு செய்வதற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் முயற்சிக்கின்றது.


**வறுமை ஆராய்ச்சி நிலையம்**
16, ஜாவத்த வீதி கொழும்பு 5, இலங்கை
தொ.பே: + 94(011) 4690200, 2503009 Fax: +94(011) 2504010
மின்னஞ்சல்: info@cepa.lk; www.cepa.lk


centre for poverty analysis

Ministry of Foreign Affairs of the Netherlands